பேராதனைப் பல்கலைக்கழகம்.

தொடர் தொலைக் கல்வி நிலையம்.

முதல் கலைத் தேர்வு (வெளிவாரி) - ஏப்ரல் 2017.

சுற்றாடல் கல்வி (SUPE 008)

எவையேனும் **நான்கு (04)** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

இந்த வினாப்பத்திரத்தில் எல்லாமாக 07 வினாக்கள் உள்ளன.

நேரம் - 03 மணித்தியாலம்.

---

1. a. சூழல் தொகுதியினை வரையறை செய்க. (05 புள்ளிகள்)

   b. குறிப்பிட்ட ஒரு சூழல் தொகுதியின் கட்டமைப்பு மற்றும் தொழிற்பாடு பற்றி விவரிக்குக. (10 புள்ளிகள்)

   c. பரப்பியல் ரீதியாக ஏன் சூழல் தொகுதிகள் வேறுபடுகின்றன என்பது பற்றி விளக்குக. (10 புள்ளிகள்)

2. a. குறிப்பிட்ட ஒரு சூழல் தொகுதியில் உற்பத்தியாக்கிகள், நுகரிகள் மற்றும் பிரிகையாக்கிகளில் தொழிற்பாடு பற்றி விவரிக்குக. (10 புள்ளிகள்)

   b. உணவுச் சங்கிலி மற்றும் உணவு வளையி என்பனவற்றை வரையறை செய்வதுடன், பொருத்தமான உதாரணங்களைப் பயன்படுத்தி அவற்றை வேறுபடுத்துக. (15 புள்ளிகள்)

3. a. உயிர்ப்பல்லினத்தன்மையினை வரையறைசெய்வதுடன், அதன் முக்கியத்துவம் பற்றி விளக்குக. (05 புள்ளிகள்)

   b. உயிர்ப்பல்லினத்தன்மை பாதுகாப்பு உபாயங்கள் பற்றி சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

   c. பொருத்தமான உதாரணங்களின் உதவியுடன் உயிர்ப்பல்லினத்தன்மைக்கான அச்சுறுத்தல் பற்றி விளக்குக. (10 புள்ளிகள்)

ம. ப. பா.

4. a. சுற்றாடல் மாற்றத்தில் தாக்கம் செலுத்தும் இயற்கைக் காரணிகளை அடையாளப்படுத்துக. (10 புள்ளிகள்)

b. மானிட காரணிகள் எவ்வாறு இயற்கை சுற்றாடல் மாற்றத்திற்கு இட்டுச்செல்கின்றன என்பது பற்றி தர்க்கரீதியாக கலந்துரையாடுக. (15 புள்ளிகள்)

5. இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளின் தாக்கங்கள் எவ்வாறு இலங்கையின் சுற்றாடல் சீரழிவிற்கு காரணமாகின்றன என்பது பற்றி பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக. (25 புள்ளிகள்)

6. a. காலநிலை மாற்றம் என்பதனை வரையறை செய்க. (10 புள்ளிகள்)

b. பூகோள சுற்றாடலுக்கான காலநிலை மாற்றத்தின் விளைவுகள் பற்றி கலந்துரையாடுக. (15 புள்ளிகள்)

7. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டு** பற்றி சிறு குறிப்பு எழுதுக (25 புள்ளிகள்)

i. அயன வலயத்தில் காடழிப்பு

ii. இலங்கையில் திண்ம கழிவு முகாமை உபாயங்கள்

iii. இலங்கையின் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்கள்

iv. அயன மழைக்காட்டின் முக்கியத்துவம்.